**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் நவம்பர் மாதம் (31.12.2020) ஆம் நாள் வியாழன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 11/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1042,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 11/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1043,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் , கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழக்கூடலூர் கிரமாம் நில அளவை எண் 1052/1C-மேலக்கூடலூர் கிராமம் சர்வே எண்கள் **1156/1c,2c,1253/1c , 1260,1261,1262,1268/1,2,1269/2, மற்றும் 1269/3B**–ல் அமையும் **20.97 ½** ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களிடம் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு வரப்பெற்ற சாலை வரைப்படத்தில் **(Road Pattern)** குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்- **26529.24** ச.மீ ,பூங்காக்கள்-**5926.77**ச.மீ ஆகியவற்றிற்கான இடங்கள் மற்றும் மேற்படி வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் மழைநீர் வடிகால் ,சிறு பாலங்கள் ,தார்சாலை மற்றும் தெரு விளக்குகள் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் தமிழக மேதகு ஆளுநர் அவர்களுக்கு தானப்பத்திரப்பதிவு (**ஆவணஎண்.3120/2020 நாள்.11.09.2020)** செய்யப்பட்டது. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ,தேனி அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களின் அடிப்படையில் பிழைத்திருத்தப்பத்திரம் **(ஆவணஎண்.5312/2020 நாள்.22.12.2020)-ன்படி** பதிவு செய்யப்பட்டுள்ளது .மேற்படி உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றிற்கான இடங்கள் தானமாக பெறப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களிடம் உத்தேச மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். **(ந.க.எண்.3482/2014/எப்1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றிற்கான இடங்களை பிழைத்திருத்தப்பத்திரத்தின்படி இந்நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களுக்கு உரிய மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1044,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

இந்நகராட்சி மூலம் தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்திரவின்பேரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 12.12.2020 மற்றும் 13.12.2020 ஆகிய தேதிகளில் நடைபெற்று முகாமிலும் 15.12.2020 வரையிலான படிவங்கள் மொத்தம் 3204 படிவங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் 1010 படிவங்களுக்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டு விட்டது. மீதமுள்ள வரப்பெற்ற 2194 விண்ணப்ப படிவங்களை உடனடியாக மாவட்ட தேர்தல் பிரிவில் உள்ள தற்காலிக பணியாளர்கள் மூலம் SCAN செய்து பதிவேற்றம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. தேர்தல் பணி முக்கியத்துவம் கருதி SCAN மற்றும் பதிவேற்றம் செய்வதற்தற்கிணங்க ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.2/– வீதம் 2194 விண்ணப்பங்க்ளுக்கு ரூ.4388/–ஐ வழங்குவதற்கு அனுமதியும், மேற்கொண்ட பணியினை

முடித்த தேர்தல் பிரிவு எழுத்தர் திரு.க.நரசிம்மன் என்பவருக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2727/2015/எப்1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1045,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-07ல்,சந்தை வளாகத்தினுள் உள்ள “E” மற்றும் “F” பிளாக்குகளில் உள்ள **12** தூய்மை பணியாளர்கள் குடியிருப்பிற்கு புதியதாக ஆழ்துழை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்து தருவதற்கும் மற்றும் கழிவு நீர் செய்வதற்கு வடிகால் அமைத்திடவும் ரூ.**5.50** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1046,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 26888/UGSS-2-2018-33, நாள்.**29.01.2019** – ன்படி, கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்–10,பெத்துக்குளத்தில் உள்ள சர்வே எண். **1749–** ல் அமைந்துள்ள உரக்கிடங்கு பகுதியில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–19ன் கீழ் ரூ.215.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 /KLD கொள்ளளவுக் கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் (Fecal Sludge Treatment Plant -FSTP)அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 26888/2018/DO2, நாள். **28.02.2019–**ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணிக்கு 04.07.2019ம் நாள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 19.07.2019–ல் வேலைஉத்திரவு வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டுமான பணிகள் விரைந்து முடித்து **Fecal Sludge Treatment Plant (FSTP)** இயக்கப்படவுள்ளதாலும், அதற்கான கசடுகழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும்,அதற்கான உரிய அனுமதி பெறப்பட்டவுடன் நாளிதழ் மற்றும் அரசிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:908/2018/இ**1)

<u>அலுவலககுறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1047,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-20,கண்ணகி நகரில் அரசு கள்ளர் ஆரம்ப பள்ளியின் பின்புறம் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கு ரூ.**1.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1048,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-16,வாட்டர் டேங்க் தெருவில் உள்ள RSK ஆரம்ப பள்ளியின் எதிரில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கு ரூ.**1.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1049,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-09,பள்ளிவாசல் தெருவில் மசூதி அருகில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1050,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-12,ஜோத்துக்கவுடர் தெருவில் ( முரளி வீட்டின் அருகில்) ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டாரும் அமைப்பதற்கும் மற்றும் ஜக்கணநாயக்கர் தெரு மொள்ளு திருப்பதி கவுடர் தெரு சந்திப்பில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பிற்கு புதியதாக நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கும் ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1051,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-03,கள்ளர் வடக்கு புதுத்தெருவில் ஓடையின் அருகில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் மற்றும் பெடஸ்டலும் அமைப்பதற்கு ரூ.1.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1052,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.12**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-11, இடையர் தெருவில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்துவதற்கு ரூ.55,000/- த்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1053,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சி புரட்சி தலைவி அம்மா காப்பீட்டு திட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பயனாளிகள் குறித்த விவரங்களை கதவிலக்கம் வாரியாக சர்வே செய்வதற்கும் வலை தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் (4713 படிவங்களுக்கு) உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க.எண்.2003/2020/எச்1)**

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதிமன்ற அனுமதியினை எதிர் நோக்கி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1054,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சியில் முத்துச்சாமி அய்யர் தெரு, மேலக்கூடலூரில் வசித்து வரும் திருமதி.திருப்பதியம்மாள் தனது தந்தையார் திரு.முத்துச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழில் தனது தாயார் பெயர் வைரக்காள் என திருத்தம் செய்ய சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD)NO19232/2020 சம்மந்தமாக நகராட்சி சார்பில் வழக்கினை நடத்துவதற்கு அரசு வழக்கறிஞர் திரு.M.கருப்பசாமிபாண்டியன் அவர்களுக்கு தொகை ரூ9500/—ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க.எண்.3021/2018/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1055,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

இந்நகராட்சி அலுவலக 4பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN-60 Y-7332 ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் கிரவுன் பழுது பணிகள் மேற்கொள்ள 04.12.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.406/2020/இ1)**

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | லட்சுமி ஆட்டோ மொலைல்ஸ் -கம்பம் | ரூ.17,360/— |
| 2. | அகரம் மோட்டார்ஸ் - கம்பம் | ரூ.15,662/- |
| 3. | நவின் ஆட்டோ ஒர்க்ஸ் - கம்பம் | ரூ.16,750/- |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அகரம் மோட்டார்ஸ் - கம்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1056,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

நகராட்சி நிர்வாக ஆணையார் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20452/2020/LA3-இல் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, **15-ஆம் மத்திய நிதி குழு மானிய நிதி திட்டம் (15$^{TH}$ FINANCE COMMISSION TIED GRANT ) 2020-21-ன் கீழ்** குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் கீழ் கண்டவாறு **ரூ.141.722** இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| **குடிநீர் திட்டப்பணிகள்** | | | |
|---|---|---|---|
| **வ.எண்** | **பணி விபரம்** | **பணியின் எண்ணிக்கை** | **மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்)** |
| **1** | **Construction of New 1.00 Lakh Litr Capacity OHT and Providing Feeder Main and Distribution Mains at Ward No.21 Lower Camp.** | **1** | **37.000** |
| **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | | | |
| **2.** | **Proportionate Share for Supply & Errection of Incinerator Of Capacity 20 T for Gudalur ,Cumbum and Chinnamanur Municipalities.** | **1** | **75.000** |
| **3.** | **Purchase of Battery operated vehicle Bins (4 Nos per Vechicle ) (20 x 4 = 80 Nos)** | **1** | **0.472** |
| **4.** | **Purchase of Mini chain Dozer ( JCB)-3DX BACKHOE LOADER** | **1** | **29.250** |
| | **மொத்தம்** | **4** | **141.722** |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் ரூ.37.000 இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட குடிநீர் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,மதுரை அவர்களிடமும் ரூ.75.000 இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமும் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பலாம்.

**தீர்மான எண்.1057,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.17**

கூடலூர் நகராட்சியில் தினசரி 12 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 8.00 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 2 எண்ணிக்கையிலான (Micro Composting Centre) நுண் உரம் செயலாக்க மையம் மூலமாக கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 4 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Recyclable Dry Waste and Non Saleable Dry Waste) உத்தேசமாக ½ மெட்ரிக் டன் அளவுள்ள உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s.Ultratech சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப தயாராக உள்ளது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்பட இயலவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாங்க மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.5000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non-Usable and Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலையினை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள ( Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள கம்பம் மற்றும் கூடலூர் நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக சின்னமனூர் நகராட்சியில் தினசரி 20 மெட்ரிக் டன் குப்பைகளை கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கவும் மேற்படி திட்டத்தினை தனியார் பங்களிப்பு (Public Private) மூலம் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு **<u>ரூ.250.00</u>** இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கும். மேற்படி செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டத்தின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சின்னமனூர் | ரூ.250.00 | 75.00 |
| 2 | கம்பம் | | 100.00 |
| 3 | கூடலூர் (தேனி) | | 75.00 |
| **மொத்தம்** | | | **250.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை சின்னமனூர் நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிர்ந்து கூடலூர் நகராட்சி மூலம் செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:—** மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15—வது நிதிக்குழு மான்ய நிதி தொகையிலிருந்து செயல்படுத்தவும் சின்னமனூர், கம்பம் மற்றும் கூடலூர் நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிரிந்து கொள்ளவும், தொடர் பராமரிப்பினை தனியார் மூலம் சின்னமனூர் நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1058,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1040** நாள்.**30.11.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **29.12.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட் டுத்தொ கை ரூ.இலட்ச த்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-12,KVR தெருவில் உள்ள கண்ணன் கோவிலின் முன்புறம் மற்றும் பக்கவாட்டில் மழை நீர் வடிகால் அமைத்து பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1.60 | திரு.எம்.சுருளி | 0.02% | – |
| | | | திரு.டி.சித்திரேசன் | – | 0.03% |

**அலுவலகக் குறிப்பு : —** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.எம்.சுருளி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1059,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.19**

கூடலூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) 2018-2019ன் கீழ் ரூ.**500.00** இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**12981/2018/இ3 நாள்.02.08.2018 ன்.**படி மூன்று சிப்பங்களாக சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது நகராட்சி பங்களிப்பு ரூ.**50.00** இலட்சம்,ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி ரூ.**190.00** இலட்சம், SFC/CFC நிதி ரூ.**150.00** இலட்சம் மற்றும் (SFC INCENTIVE) மாநில நிதி ஆணையத்தின் ஊக்கு விப்பு தொகை ரூ**110.00** இலட்சம் வீதம் நிதி பங்களிப்பில் செலவினத்தினை ஈடு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிப்பங்களிப்பில் ஒருங்கிணைந்த நகர்புறசாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி ரூ.**190.00** இலட்சம் (TURIP) திட்ட நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு வரப்பெறும் SFC/CFC நிதியில் ரூ.**150.00** இலட்சமும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.**50.00** இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.தற்போது நிதி ஊக்குவிப்பு தொகை ரூ.**110.00** இலட்சம் இந்நகராட்சிக்கு விடுவிக்கபடவில்லை ஒதுக்கீடு செய்யபட்ட ஊக்குவிப்பு தொகையினை விடுவிக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக **14.12.2020** ஆம் நாள் கடிதம் மூலம் அனுப்பபட்டது.மேற்படி கடிதத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.**10971/2018/LA3 நாள்.22.**12.2020 **ல்** ,ஐந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி ஊக்குவிப்பு தொகையினை பெற கடந்த ஆண்டினை விட நடப்பாண்டில் 20 விழுக்காட்டுக்கும் மேலாக வரி வசூலை மேம்படுத்த அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி கூடலூர் நகராட்சியில் வரி வசூலில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் ஊக்குவிப்பு நிதி வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.தற்போது ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2018-19ன் கீழ் **90%** பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.மீதமுள்ள **10%** பணிகள் நடைபெற்று வருகிறது.நாளது தேதி வரை செய்து முடிக்கபட்ட திட்டபணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க வேண்டியுள்ளது. ஏற்கனவே மேற்படி திட்டத்திற்குரிய

நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.50.00 இலட்சமும் நகராட்சி பொதுநிதியில் ஒதுக்கீடு செய்து பட்டியல் தொகை வழங்கபட்டுவிட்டது.இந்நிலையில் மேலும் ரூ.110.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து மேற்படி திட்டத்தினை முடிக்க இயலாத நிலை உள்ளது.எனவே மேற்படி தொகை ரூ.110.00 இலட்சத்தினை அரசின் CGF/IGFF நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1060,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.1031 நாள்.**30.11.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 29.12.2020 ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-17, இராஜீவ் காந்தி நகரில் உள்ள பெண்கள் கழிப்பறை அருகில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கும் மற்றும் வார்டு எண்-18 பொம்மையசாமி கோவில் தெருவில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பிற்கு புதியதாக நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைத்தல். | 1.50 | திரு.டி.சித்திரேசன் | 0.05% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.16% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.05% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.டி.சித்திரேசன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1061,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.21**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1004** நாள்.**29.10.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.12.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-10 பெத்து குளத்தில் உள்ள நகராட்சி குப்பைக் கிடங்கிற்கு தென்புறம் உள்ள வயல் வெளிக்கு விவசாயிகள் சென்று வர ஏதுவாக தற்காலிக சாலை அமைத்தல் | 1.00 | திரு.பி.முருகன் | 0.23% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.91% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1062,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.22**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான **எண்.1041** நாள்.**30.11.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **29.12.2020** ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும்.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை சரி செய்தல். | 4.00 | திரு.டி.சித்திரேசன் | 0.70% | – |
| | | | திரு.பி.முருகன் | – | 0.45% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.70% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.டி.சித்திரேசன்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1063,அங்கீகரிக்கப்பட்டது.**
**பொருள்.23**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-14,நடுரைஸ் மில் தெருவில் சேதமடைந்து அப்பகுதி மக்களுக்கு இடையூராக உள்ள மழைநீர் வடிகாலினை புதிதகாக அமைக்க ரூ.2.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1064,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உலகலாவிய தொற்று நோயான கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்க இந்நகராட்சி பொதுநிதி 2020–2021 ஆம் ஆண்டிற்கு 500 லிட்டர் லைசால், திடக்கழிவு மேலாண்மை பணியில் நுண்ணுற செயலாக்க மையத்தில் பயன்படுத்த லெமன்கிராஸ் ஆயில் 60 லிட்டர் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ3,85,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1065,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.25**

இந்நகராட்சிக்கு சொந்தமான காந்திஜி பூங்கா கட்டண கழிப்பறையினை கடந்த ஆண்டினை விட நடப்பு ஆண்டுக்கு அதிக தொகைக்கு குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் திரு.ப.சிவனேசன் என்பவர் கட்டண கழிப்பறை பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக 25.06.2020 அன்று தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் நடப்பு குத்தகை தொகையினை செலுத்தவும், 04.07.2020 முதல் துறைரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தும் 02.07.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், வருவாய் ஆய்வாளர் முன்னிலையில் 03.07.2020 வெள்ளிகிழமை அன்று மாலை 6.00 மணிக்கு பூட்டி சீல் வைக்கப்பட்டதனை தொடர்ந்து 04.07.2020 முதல் துறைரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே, திரு.ப.சிவனேசன், குத்தகைதாரர் காந்திஜி பூங்கா கட்டண

கழிப்பறையின் வசூல் செய்யும் குத்தகை உரிமத்தினை ரத்து செய்யப்பட்டமைக்கு, மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1066,அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.26**

கூடலூர் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள செலவினங்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| பிரிவு 15ன் பதிவேட்டின் வ.எண் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 64 | கொரோனா வைரஸ் பரவுதலை தடுக்க அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் கூடுதலாக வாங்கியது. | 38,031 |
| 65,66 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் 540 லிட்டர் மற்றும் முககவசம் (1500) எண்ணம் வாங்கியது | 1,89,170 |
| 67 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் 500 லிட்டர் வாங்கியது. | 1,24,500 |
| 68 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக சானிடைசர் 100 லிட்டர் மற்றும் ஹைபோகுளோரைடு 500 லிட்டர் வாங்கியது. | 1,16,000 |
| 69 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக பிளக்ஸ்போர்டுகள், ஸ்டிக்கர்கள், துண்டுபிரசுரங்கள் அச்சடித்து வாங்கியது. | 1,62,600 |
| 70 | அம்மா உணவகத்தில் உள்ள சமையல் எரிவாயு பைப் லைன்கள் மற்றும் சமையல் எரிவாயு அடுப்பில் பர்னர்களை சரிசெய்தது. | 9900 |
| 71 | கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக பொதுமக்கள் தனிமனித இடைவெளியினை கடைபிடிக்க சதுர அளவில் கட்டங்கள் அமைத்தது. | 6500 |
| 72 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக ஹோண்டா மோட்டார் செட்ராடு மிசின் வாங்கியது. | 70,000 |
| 73 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக கூடுதலாக 15 தனியார் துப்புரவு பணியாளர்கள் பணி அமர்த்தியது. | 3,11,400 |
| 74 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக ஹோண்டா மோட்டார் ஓஸ் அறுந்து விட்டதால் அதனை சரிசெய்தது. | 16,125 |
| 75 | லோயர் கேம்ப் தலைமை நீரேற்றிலிருந்து வரும் 400mm ACபிரதான குழாயில் நான்கு இடங்களில் உள்ள நீர் கசிவினை சரி செய்தல். | 2,54,563 |
| 76 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் 500 லிட்டர் வாங்கியது. | 1,24,500 |
| 77 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் 500 லிட்டர் வாங்கியது. | 1,24,500 |
| 78 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக 700 ஸ்டிக்கர்கள், இரசீது புத்தகம் 1 முதல் 600 வரை அச்சடித்து வாங்கியது. | 25,450 |
| 79 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதலை கண்டறியவும், ஆக்சிஜின்அளவு கண்டறியவும் Digital Infrared Therma Meter-5, Finger Tip Pulse Ximeter–5 எண்ணம் வாங்கியது. | 55,300 |
| 80 | கொரோனா வைரஸ் தொற்று உள்ள நபர்களை தனிமைப்படுத்திட அரசு மேல்நிலைப்பள்ளி லோயர்கேம்பில் படுக்கை அறை வசதியுடன் மின்விளக்குகள் அமைத்தல். | 82,000 |
| 81 | வார்டு எண்19 பெரியமாயத்தேவர் சந்து மற்றுமூ மகூர் தேவர் சந்திற்கு மெயின் பஜாரிலிருந்து புதிதாக பகிர்மானக் குழாய் அமைத்தல். | 1,19,489 |
| 82 | வார்டு எண். 16 வாட்டர் டேங் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் மற்றும் வார்டு எண். 8 பூங்கா டேங்கில் உள்ள முட்புதர்களை JCP மூலம் சுத்தம் செய்தது. | 48,450 |
| 83 | கொரோனா வைரஸ் தொற்று உள்ள நபர்களை கண்டறிந்து லோயர் கேம்ப்பில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மின்விளக்குகள் மற்றும் மின்உதிரி பொருட்கள் விநியோகம் செய்தது. | 44,400 |
| 84 | பொது சுகாதார வாகனம் எண். TATA ACE (LCV) TN 60 AY 4020 க்கு கிளட்ச் பிளேட் பழுது நீக்கம் செய்தது. | 13,950 |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

மன்றம் பதிவுசெய்யலாம்.

**<u>தீர்மான எண்.1067,அனுமதிக்கப்பட்டது.</u>**